பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(29.10.2022 முதல் 02.11.2022 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

---

அறிக்கை எண்: 086 (10) PJN/GKMS/2022 தேதி: 28.10.2022

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (23.10.2022 முதல் 27.10.2022 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -02.11.2022 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23/10 | 24/10 | 25/10 | 26/10 | 27/10 | | நாள்-1 29/10 | நாள்-2 30/10 | நாள்-3 31/10 | நாள்-4 01/11 | நாள்-5 02/11 |
| 22.5 | 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 3 | 15 | 4 | 8 | 25 |
| 31 | 31 | 34 | 34 | 34 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 31 | 30 | 31 | 30 | 30 |
| 24 | 26 | 24 | 24 | 23 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 24 | 23 | 23 | 23 | 22 |
| 4 | 5 | 4 | 2 | 2 | மேக மூட்டம் | 8 | 8 | 8 | 8 | 8 |
| 69-88 | 68-92 | 62-88 | 62-85 | 52-80 | ஈரப்பதம் (%) | 60-90 | 60-90 | 60-90 | 60-90 | 60-90 |
| 3 | 2 | 1 | 1 | 2 | காற்றின் வேகம் (கி.மீ) | 10 | 12 | 12 | 12 | 10 |
| வடக்கு வட கிழக்கு | வடக்கு வட கிழக்கு | வடக்கு வட கிழக்கு | மேற்கு வட மேற்கு | வடக்கு வட கிழக்கு | காற்றின் திசை | வடக்கு வட கிழக்கு | வடக்கு வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | கிழக்கு |

## எதிர்பார்க்கப்படும் வானிலை (29.10.2022 முதல் 02.11.2022 வரை):

- அக்டோபர் 29 லிருந்து நவம்பர் 02 வரை அநேக இடங்களில் லேசான முதல் மிதமான மழையும்
- அக்டோபர் 30, 31 மற்றும் நவம்பர் 02 தேதிகளில் ஓரிரு இடங்களில் கன மழையும் எதிர்பார்க்கப்படுகிறது.
- அக்டோபர் 29லிருந்து நவம்பர் 02வரை இடியுடன் மின்னல் ஓரிரு இடங்களில் இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்ப நிலை 22-31 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 60-90 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் மணிக்கு 10-12 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் வடக்கு வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுறை

| பயிர்கள்/ கால்நடைகள் | நிலைகள் / விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| நெல் | தூர் கட்டும் பருவம் | → நெற் பயிரில் இலை சுருட்டுப் புழுக்களை கட்டுப்படுத்த டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் ஒட்டுண்ணிகளை 5cc (ஹெக்டேருக்கு 1,00,000) என்ற அளவில் 37, 44, 54 ஆகிய நாட்களில் வெளியிடலாம்.<br>→ தழைச்சத்துக்களை தேவையில்லாமல் அளவுக்கு அதிகமாக படுத்துவத்தை தவிர்க்கவேண்டும்.<br>→ விளக்குப் பொறியை பயன்படுத்தி அந்து பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம்.<br>நடவுவயலில் டி(T) வடிவ குச்சிகளை வைத்து பூச்சிகளை உண்ணும் பறவைகளை பயன்படுத்தி பூச்சிகளை கட்டுப்படுத்தலாம் அல்லது கார்டேப்ஹைட்ரோகுளோரைடு (cartaphydrochloride 50% SP) லிட்டருக்கு 2 கிராம் அல்லது ஃப்ளுபென்டையமைடு (flubendiamide 20 WG) லிட்டருக்கு 0.25 கிராம் அல்லது தையமீதாக்சம் (thiamethoxam 25 WG) லிட்டருக்கு 0.2 கிராம் என்ற அளவில் தெளிக்கலாம். |
| கால்நடை | தடுப்பூசி செலுத்துதல் | தற்பொழுது நிலவும் வானிலை சூழலானது கோமாரி நோய் வருவதற்கு ஏற்புடையதாய் இருப்பதால் தங்கள் கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். |

**குறுஞ்செய்தி:** அடுத்த சில நாட்களுக்கு லேசான முதல் கன மழை எதிர்பார்க்கப்படுவதால் அனைத்து பயிர்களுக்கும் வடிகால் வசதி அளிக்கவும்.

**முதல்வர்**